ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 - வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# சமூகவியல் கோட்பாட்டின் அடிப்படையில் புலம்பெயர் அந்நியமாதல்

முனைவர் சு.திரிவேணி
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
ஸ்ரீ இராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்

ஆய்வுச் சுருக்கம்

தாயகச் சூழலில் பொருந்தி வாழ்ந்த மக்கள் வேறிடம் நாடிச் சென்ற பின் தாயகத்திற்கும் புலம்பெயர்ந்த மக்களுக்குமிடையே ஏற்படும் இடைவெளியே அந்நியமாதல் எனப்படுகிறது. சுயம் அந்நியமாதல், தாயகம் அந்நியமாதல், மக்கள் அந்நியமாதல் என்று அந்நியமாதலை வகைப்படுத்தலாம். தாயகத்திற்கும் மக்களுக்குமான பிணைப்பு மாற்றமுறும் அந்நியமாதலுக்கு இரு பிரிவினரும் காரணமாக அமையக்கூடும். வெவ்வேறு பண்பாடுகளுக்கிடையில் தொடர்பு ஏற்படும்போது மக்களின் நம்பிக்கைகள், வாழ்க்கைமுறை மற்றும் பண்பாட்டிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

புலம்பெயர்ந்து சென்று வாழும் சூழல் இயல்பாகவே அந்நியமானது. அச்சூழலுக்கும் புலம்பெயர்ந்த மக்களுக்கும் இடையே வேறுபாடுகள் இருப்பது தவிர்க்கமுடியாதது. ஆனால் தாயகச்சூழல் என்பது அவ்வாறானதல்ல. தாயகத்தின் வாழ்க்கை முறை, உணவு, உறவுகள், நட்புகள், பழக்கவழக்கங்கள், கல்வி போன்ற பல கூறுபாடுகள் மக்களுக்கும் தாயகத்திற்கும் இடையில் நெருங்கிய பிணைப்புக் கொண்டவையாக உள்ளன. ஆயினும் புலம்பெயர்ந்து சென்ற மக்களுக்கும் தாயகத்திற்குமிடையே கால இடைவெளியாலும், தொடர்புகள் விட்டுப் போவதாலும் வேறுபாடுகள் தோன்றி அதிகரிப்பதனால் பலவித மாற்றங்கள் ஏற்படுகின்றன. இம்மாற்றங்கள் மக்களையும் தாயகத்தையும் அந்நியப்படுத்துகின்றன. இத்தகைய அந்நியமாதல்களைத் தவிர்த்தல் அவசியமானது. மக்கள் தாயகத்தையும் தாயகம் மக்களையும் பிரிந்து அந்நியமாதலைத் தடுத்தால் இருதரப்பும் வளர்ச்சி அடையும் வாய்ப்பு ஏற்படும்.

இவ்வாய்வில் புலம்பெயர்தலின் காரணமாக ஏற்படும் அந்நியமாதலில் சமூகவியல் கோட்பாட்டுக் கூறுகளான ஒருங்கிணைவு, முரண்பாடு, பண்பாடு, பண்பாடுகளிடையிலான தொடர்பு, உளச்சார்பு ஆகியன குறித்த செய்திகள் இடம்பெறுகின்றன.

குறியீட்டுச் சொற்கள்

புலம்பெயர்தல், அந்நியமாதல், பண்பாட்டுச் சிக்கல், தாயகம்

## முன்னுரை

மக்கள் தமது இருப்பிடங்களை விட்டுக் கல்வி, வேலைவாய்ப்பு, அரசியல் - சமூக நெருக்கடிகள் எனப் பலவிதக் காரணங்களினால் புலம்பெயர்கிறார்கள். வளரும் நாடுகளில் வேலை வாய்ப்பின் பொருட்டு மக்கள் கிராமங்களிலிருந்து நகரங்களை நோக்கியும், வளர்ந்த நாடுகளில் அமைதியான மற்றும் தூய இயற்கைச்சூழலை விரும்பி நகரங்களிலிருந்து கிராமங்களை நோக்கியும் இடம் பெயர்கிறார்கள். ஒரு சமூகத்திலிருந்து மக்கள் புலம்பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்று வாழ முற்படும் போது ஏற்படும் மாறுபாடுகளுள் குறிப்பிடத்தக்கது அந்நியமாதல் ஆகும்.

புலம்பெயர்ந்து வாழும் மக்கள், தாயகத்தில் நிலவிய வாழ்க்கை முறைகளையும் பழக்கவழக்கங்களையும் கடைபிடிப்பவர்களாக உள்ளனர். புலம்பெயர்ந்த இடத்தில் மக்களது

வாழ்க்கை இம்முறைகளில் இருந்து மாறுபட்டதாக இருக்கக்கூடும். அத்தகைய சூழலில் இரு வேறு இடங்களுக்கும் இடையில் இருக்கக்கூடிய வேறுபாட்டை உணர்ந்து புலம்பெயரும் இடத்தில் அதற்கேற்ற வாழ்க்கையையும் தாயகத்தில் அச்சூழலுக்கு ஏற்பவும் மக்கள் வாழத் தலைப்படுகின்றனர். இதனால் இரு இடங்களிலும் சமூகவியல் கோட்பாட்டுக் கூறான ஒருங்கிணைவின் அடிப்படையில் மக்கள் பொருந்திப் போக இயலும். ஆனால் இவர்கள் தமக்குள் முரண்பட்டுப் போகிறார்கள். இது சுயம் அந்நியமாதல் எனப்படும். இதனோடு தாயகம் அந்நியமாதல், மக்கள் அந்நியமாதல் எனவும் அந்நியமாதலை வகைப்படுத்தி மக்கள் எதிர்கொள்ளும் உளவியல் சிக்கல்களை ஆராய்வதன் மூலம் ஒப்பற்ற மனிதவளத்தைக் காக்கமுடியும் என்பதை இக்கட்டுரை ஆராயத்தலைப்படுகிறது.

ஆய்வுக்கருதுகோள்

தம் உண்மை இயல்புகளைத் தொலைத்து வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுபட வேண்டியவர்களாக இருக்கும் இம்மக்களின் மனநிலை, பிறருடனான உறவு நிலை மற்றும் பிறர் இவர்களோடு கொண்டிருக்கும் உறவுநிலைகள் ஆகியவை குறித்தும் கவனம் செலுத்த வேண்டும் என்பதைக் கருதுகோளாகக் கொண்டு இந்த ஆய்வு அமைகிறது.

ஆய்வு நெறிமுறைகள்

ஆய்வுக்கட்டுரையானது சமூகவியல் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. புலம்பெயரும் மக்களின் வாழ்க்கை, அவர்கள் வாழும் சூழல் குறித்து ஆராயும்போது சமூகவியல் ஆய்வும் மக்களின் மனநிலை குறித்த ஆய்வில் உளவியல் ஆய்வுமுறையும் கையாளப்படுகிறது.

அந்நியமாதல்

“எந்தப் பண்பாடும் தனித்து இருப்பதில்லை. பிற பண்பாடுகளோடு உறவுகொண்டே வாழ்கிறது. அருகருகே இருக்கும் பண்பாடுகளோடு தொடர்பு கொள்கிறது”[1]

தான் வளர்ந்த இடச்சூழலும் வாழ்க்கை முறையும் முற்றிலும் பொருந்தாத இடத்தில் வாழும் மக்கள் இயல்பாகவே அந்நியமாகிறார்கள். அத்தகைய சூழ்நிலையில் அவர்கள் மனம், இந்த மாற்றங்களைப் புரிந்துகொண்டு அதற்கேற்ப தங்களைத் தகவமைத்துக் கொள்ளமுயன்றாலும் பழக்கத்தின் காரணமாக, வெறுமை மனநிலை தோன்றக்கூடும். இந்த நிலையே அந்நியமாதலின் கவனம் செலுத்தவேண்டிய படிநிலையாகும்.

தாயகம் அந்நியமாதல்

பலவிதக் காரணங்களால் தாயகத்தை விடுத்து மக்கள் புலம்பெயர்கிறார்கள். அப்போது நிலவிய சமூக, அரசியல் நிலைகளைக் கருத்தில் கொண்டு தாயகத்தைக் கற்பனை செய்கிறார்கள். அக்கனவு உருவங்களோடு தாயகம் திரும்பும் இவர்களுக்குத் தம் கற்பனைகள் காலாவதியாகிவிட்ட உண்மை அதிர்ச்சியளிக்கிறது. தமக்குத் தொடர்பில்லாத இடம், மக்களுக்கிடையில் வாழ்வதைப் போன்ற உணர்வும் ஏமாற்றமும் இம்மக்களது மனதை வருத்துகிறது. இம்மக்கள் தாயகச் சூழலை அந்நியமாகக் கருதுகின்றனர். அவர்களால் தாயகத்துடன் ஒன்றவோ, அதன் மாற்றத்தை ஏற்றுக்கொள்ளவோ இயலாததாகிறது.

“அமெரிக்காவிலிருந்து நீண்ட இடைவெளியில் இந்தியாவிற்குத் திரும்பும் அமெரிக்கத் தமிழர்கள் பலரும் வெளியே சொல்ல முடியாத அதிர்ச்சிக்கு ஆட்படுகிறார்கள். இந்த அதிர்ச்சிக்குக் காலத்தின் இடைவெளியே காரணம் என்பதால் இதைக் “கால அதிர்ச்சி” என்று அழைக்கலாம்”[2]. இத்தகைய கால அதிர்ச்சிகள் பெரும்பாலான புலம்பெயர் மக்களை அதிர்ச்சிக்கும் கவலைக்கும் உள்ளாக்குகின்றன. அவர்களது கனவுகளைப் பொய்யாக்கி விடுகின்றன.

புலம்பெயர்ந்த மக்கள் தமது இடங்களில் தாயகத்தில் இருப்பது போன்ற அமைப்பை உருவாக்க முயல்கிறார்கள். வெளிநாடுகள் பலவற்றில் இந்தியக் கடைவீதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. “ஐஸ் பாறையில் உறைந்த உடல்கள் போல ஆண்டுகளைக் கடந்தும் தம் தாயக இயல்புகளினின்று மாறாமல் புலம்பெயர் சமூகம் வாழ்கின்றது”[3].

மக்கள் தமது தாயகத்தைச் சார்ந்தோருடன் ஒன்று கூடும்போது தாயகத்தில் இருப்பது போன்ற அமைப்பையும் வாழ்க்கையையும் உருவாக்க முற்படுகிறார்கள். மக்கள் புலம்பெயர்ந்து

வாழும் இடங்களில் தங்களது தாயகத்தில் வாழ்கின்ற வாழ்க்கை முறைகளையும் அமைப்பையும் ஏற்படுத்திக் கொள்வதும் அவற்றில் அதிகமான ஈடுபாடு காட்டுவதும் 'கெட்டோ கலாச்சாரம்'[4] எனப்படுகிறது. இது ஒரு வகையான 'போலச்செய்தல்' ஆகும். "இவர்களுக்குப் பிறக்கும் சந்ததிகளுக்கும் இவர்களுக்கும் உள்ள தொடர்பு பூர்வஜென்மத் தொடர்பு போல"[5] என்று புலம்பெயர் இலக்கியமொன்று வர்ணிக்கிறது.

புலம்பெயர்ந்த சூழலுடன் ஒன்றாமல் தாயக நினைவுகளுடனும் நேயத்துடனும் தாயக வாழ்வைப் 'போலச் செய்யும்' முயற்சிகளில் ஈடுபட்டு வாழும் இம்மக்கள், சிறிதுகால இடைவெளிக்குப் பிறகு தாயகத்திற்கு வரும் பொழுது அதனுடன் அந்நியப்படுகின்றனர்.

புலம்பெயர் சூழல், தாயகம் ஆகிய இருவகைப் பண்பாடுகளுடனும் சமூகவியல் கோட்பாட்டு வரையறைப்படி முரண்பட்டு நிற்கும் இத்தகையோரது நிலை கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

*மக்கள் அந்நியமாதல்*

தாயகத்தை விட்டுப் புலம்பெயர்ந்த மக்கள், கால இடைவெளியினாலும் ஈர்ப்புக் குறைவாலும் தாயகத்தை மனதளவில் பிரிந்து போகும் சூழல் ஏற்படுகிறது. உடலுழைப்புத் தொழிலாளர்கள் திருமணம் உள்ளிட்ட அனைத்து உறவுகளையும் தொடர்புகளையும் தாயகத்திலேயே ஏற்படுத்திக் கொள்கின்றனர். ஆனால் கற்றறிந்த சமூகத்தினரோ மிக எளிதாகத் தமது தாயகத்துடனான உறவையும் மக்களுடனான தொடர்புகளையும் துண்டித்துக் கொண்டு அந்நியர்களாக மாறிப் போகிறார்கள். புலம்பெயர்ந்த சூழலில் பொருந்தித் தாயகத்தை மறந்துபோகும் இவர்களது அறிவும் உலகளாவிய அனுபவங்களும் தாயகத்திற்கு உதவாதவை ஆகிவிடுகின்றன.

இந்தியாவில் நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் இடையே அனைத்துத் துறைகளிலும் பெரும் ஏற்றத்தாழ்வு காணப்படுகிறது. கிராமங்களில் இருந்து பல அறிஞர்கள், தொழில்நுட்ப வல்லுனர்கள் உருவாகி நகரங்களுக்கு இடம்பெயர்ந்து வருகின்றனர். இவ்வாறு கிராம மக்கள் அறிவு வளர்ச்சியும் முன்னேற்றமும் பெற்ற பிறகும் கிராமங்களில் முன்னேற்றம் ஏற்படவில்லை. மக்களது அறிவு, அவர்களின் தாயக வளர்ச்சிக்கு உதவாமல் போகும் இத்தகைய சூழலானது புலம்பெயர்வோர் அந்நியமாதலின் காரணமாக உருவாகிறது.

இதனை,

- அறிவுப் பற்றாக்குறை (Brain drain)
- அறிவை அடைதல் (Brain gain)
- அறிவு வீணாதல் (Brain waste)

என மூன்று வகையாகக் குறிப்பிடுகின்றனர்[6].

மக்கள் புலம்பெயர்வதால் தாயகத்திற்கு அறிவுப் பற்றாக்குறை ஏற்படுகிறது. புகலிடச் சூழலுக்கு அறிவுவளம் கிடைக்கிறது. புகலிடச் சூழலில் பொருத்தமற்ற வேலை செய்யும் பொழுதோ, வேலைக்காகக் காத்திருக்கும் சூழலிலோ மக்களின் அறிவு வீணாகிறது.

இந்தியாவில் இருந்து ஏராளமான தொழில்நுட்பம், அறிவியல்துறை வல்லுநர்கள் ஆண்டுதோறும் உலக நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து செல்கின்றனர். புலம்பெயர்ந்து வாழும் நாட்டில் அரசியல், சமூக மாற்றங்களால் இவர்களது நிலை பாதிக்கப்படும் போது இம்மக்களது துயரை யாரோ முகமறியாத அந்நியர்களுக்கு ஏற்பட்டதைப் போலக் கருதி, பாதிப்பற்றதாகத் தாயகம் ஒதுக்கி விடுகிறது. அவர்களைத் தன் மக்களாகக் கருதித் துயர்துடைக்க முற்படுவதில்லை.

சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் தமிழர்கள் மீதான தாக்குதல்கள் நடைபெற்ற பொழுது, இந்திய அரசோ, இந்திய மற்றும் இலங்கை மக்களோ பெரிதாகக் கவலைப்படவில்லை என்பது நினைவுகூரத்தக்கது. எனவே தாயக வளர்ச்சிக்கு மட்டுமல்லாமல், தமது பாதுகாப்பு மற்றும் நலவாழ்வின் பொருட்டும் இத்தகைய அந்நியமாதல்களைத் தவிர்க்க வேண்டும். தங்களது வாக்குரிமையைப் பயன்படுத்துதல், தங்களது பரந்துபட்ட அறிவாலும் அனுபவத்தாலும் தன் மக்களுக்கும் நாட்டுக்கும் உதவுதல் எனப் பலவகையான இன்றியமையாத சூழல்களில் புலம்பெயர் தமிழர்களின் பங்களிப்பு தாயகத்திற்குக் கிடைப்பதில்லை. புலம்பெயர்ந்த மக்கள் தங்களது பண்பாட்டை இழப்பதும் மொழியை மறப்பதும் அந்நியமாதலின் விளைவுகளே ஆகும்.

அரபு நாடுகளுக்குப் புலம்பெயர்வோருக்கு நிரந்தரக் குடியுரிமை கிடைக்கும் வாய்ப்பு மிக அரிது. சமீப காலத்தில்தான் இது குறித்த கருத்தாக்கங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. எனவே தமது தாயகத்தை மறக்காமல் மீண்டு வரும் நோக்கம் கொண்டவர்களாக இந்நாடுகளுக்குச் செல்லும் மக்கள் வாழ்கிறார்கள். ஆனால் ஐரோப்பிய நாடுகளுக்குப் புலம் பெயர்வோர் நிரந்தரக் குடியுரிமை பெறும் வாய்ப்பு உள்ளதால் அந்நாடுகளின் வளம், வசதிகளால் ஈர்க்கப்பட்டுத் தாயகம் திரும்ப மனமற்றவர்களாகி அந்நியமாகிறார்கள்.

"தாய்நாட்டுக்குத் திரும்பி எல்லாவற்றையும் சூனியத்திலிருந்து தொடங்குவதற்குப் பதிலாகப் புகலிடத்தில் கிடைத்திருக்கும் வாழ்க்கையைத் தொடர்வதுதான் நடைமுறைச் சாத்தியம் கொண்டது என்பதில் மக்கள் தெளிவாக இருக்கின்றனர்"[7].

மக்கள் பெறும் நன்மைகள்

சமூக, அரசியல், பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மறுவாழ்வு, உலகளாவிய அனுபவம், தாயக மக்களுக்கு உதவும் வாய்ப்பு ஆகிய நன்மைகளை மக்கள் அடைகின்றனர். வாழும் உரிமையும் அங்கீகாரமும் கிடைக்கப் பெறாத மக்கள் புலம்பெயர்ந்து, பொருளாதார உயர்வடையும்போது சமூகம் அவர்களுக்கான உரிமையைத் தரவேண்டிய அவசியம் ஏற்படுவதில்லை; மாறாக அவர்களே தமது வாழ்வை நலமும் வளமும் பெற்றதாக மாற்ற முயலும்.

தங்களது வறுமையில் இருந்து தப்பிக்கப் போராடும் மக்கள் புலம்பெயர முற்படுகிறார்கள். உலகளாவிய அனுபவத்தைப் பெறுகிறார்கள். பிற இடங்களிலும் நாடுகளிலும் இருக்கும் சூழல், பண்பாடு மற்றும் வாழ்வியல் குறித்த அறிவும் அனுபவமும் புலம்பெயர்ந்து செல்லும் மக்களுக்கு நேரடியாகக் கண்டுணரக் கூடிய வாய்ப்புகள் அதிகம். இதனால் அகநிலை முன்னேற்றத்திற்கான வழிகள் குறித்து ஆராயும் திறனும் தீர்வு காணும் வழிவகைகளும் அதிகரிக்கின்றன. மக்கள் தாம் பெற்ற பலதரப்பட்ட அனுபவங்களால் தாயக மக்களுக்கு உதவும் வாய்ப்பைப் பெறுகிறார்கள்.

தாயகம் பயனடைதல்

மக்கள் தமது இருப்பிடத்தை விட்டுப் புலம்பெயர்ந்து வேறு இடங்களுக்குச் செல்வதால் தாயகத்திற்கும் புகலிடத்திற்கும் இடையே தகவல் பரிமாற்றம் மட்டுமல்லாது பொருளாதார, பண்பாட்டுப் பரிவர்த்தனைகளும் ஏற்படுகின்றன.

உலகம் முழுவதிலுமுள்ள பல நாடுகளில் மக்களுக்கு இயல்பான வாழ்க்கை கிடைக்கப் பெறுவதில்லை. தமது அன்றாட வாழ்க்கையை வாழப் போராடும் மக்கள் தங்களது அவலங்களுக்குக் காரணமான அரசின் மீதும் சமூகத்தின் மீதும் கோபம் கொண்டு எதிர்ப்பு உணர்வை வளர்த்துக் கொள்ளுதல் இயல்பாக நடைபெறும் செயலாகும். அவர்களிடையே கலகங்கள் உருவாகத் தொடங்கினால் உலகமே போர்க்களமாக மாறிவிடக்கூடும். அத்தகைய நிலையிலிருந்து உலகைக் காக்கும் எளிய வழியாகப் புலம்பெயர்தல் அமைகிறது. இதனால் மக்களிடையே தோன்றும் ஏமாற்றம், விரக்தி, சலிப்பு, எதிர்ப்புணர்வும், வன்முறை, கலகங்களும் தவிர்க்கப்படுகின்றன.

"பிரஷர் குக்கரில் நீராவியில் பாதுகாப்பாக வெளியேற வைத்திருக்கும் வால்வு போல வேலையில்லாத் திண்டாட்டம், குறைந்த கூலி, பொருளாதாரப் பிரச்சினைகள், சமூக மற்றும் அரசியல் அடக்குமுறைகள் போன்றவற்றால் பாதிக்கப்படும் மக்கள் பாதுகாப்புத் தேடி வெளியேறும் புலம்பெயர்தல் மட்டும் இல்லாமல் இருந்தால் வால்வு அடைத்துக் கொண்டால் ஏற்படுவது போல இந்தியா, வங்காளதேசம் போன்ற வளரும் நாடுகளில் அரசியல், பொருளாதார, சமூக முரண்பாடுகளின் மோதல்கள் மிகப்பெரிய அளவில் பிரச்சனையாக, கட்டுக்கடங்காமல் வெடித்திருக்கும்"[8].

முடிவுரை

வாழ இயலாத சூழலில் தாயகத்தை விட்டுப் பிரிந்து செல்லும் வாழ்க்கை, மேம்பட்ட விடுதலையையும் மகிழ்ச்சியையும் வழங்குவதில்லை என்பதையே புலம்பெயர் இலக்கியங்கள் உணர்த்துகின்றன. தனிமை, வெறுமை போன்ற எதிர்மறை உணர்வுகளினின்று தப்பிக்கும் வழியாகக் கூடுதல் பணிச் சுமையை மக்கள் ஏற்றுக் கொள்வதும் நடைமுறையில் உள்ளது.

புலம்பெயர் சமூகம் தாயகத்திற்குப் பொருளாதார உதவிகளைச் செய்வது போலவே அரசியல், சமூக நிலைகளை மேம்படுத்தவும் அக்கறை செலுத்தவேண்டும். அந்நியமாதலுக்கு ஆட்படாமல் விருப்பத்தோடு செயல்பட்டால் தாயக முன்னேற்றத்தில் வலுவான பங்களிப்பைச் செய்திட இயலும். பலவிதக் காரணங்களால் தாயகத்தை விட்டுப் புலம்பெயரும் மனிதவளத்தைத் தக்க வைக்கும் முயற்சிகளில் அரசுகள் ஈடுபடுவதும் புலம்பெயர்ந்த மக்கள் தாயகத்தில் இருந்து அந்நியப்படாமல் இருப்பதும் சமூக உயர்வுக்கு வழிவகுக்கும்.

வெவ்வேறு வகையான பண்பாடுகளுக்கு இடையிலான தன்மைகளையும் தொடர்புகளையும் அறிந்து கொள்வதன் வாயிலாக மக்கள் இவற்றை ஒருங்கிணைத்து புதுமையான, ஆக்கப்பூர்வமான வாழ்க்கை முறைகளை நடைமுறைப்படுத்த இயலும். இதனால் மக்கள் ஒன்றிணைவதுடன் உளச்சார்பு நிறைந்த சமூகத்தை உருவாக்கக்கூடும்.

மேற்கோள்கள்:


1. தமிழின் பண்பாட்டு வெளிகள்-ப.6
2. வன்முறை வாழ்க்கை - ப.20
3. மேலது - ப.21
4. வேர்களைத்தேடி - ப.3
5. மேலது - ப.4
6. https://publications.iom.int/system/files/pdf/iml_34_glossary.pdf
7. புலம்பெயர் இலக்கியம் - விவாதத்திற்கான புள்ளிகள் - கீற்று மின்னிதழ்
8. திரை கடலோடியும் துயரம் தேடு - ப.74


குறிப்புப்பட்டியல்

நூல்கள்:


1. கண்ணன், "வன்முறை வாழ்க்கை" - காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2003
2. திருவள்ளுவர் யோ., "திரை கடலோடியும் துயரம் தேடு" - ஆழி பப்ளிஷர்ஸ், சென்னை, 2008
3. நடராஜன் தி.சு., "தமிழின் பண்பாட்டு வெளிகள்" - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2000
4. வாஸந்தி, "வேர்களைத்தேடி" - வானதி பதிப்பகம், சென்னை, 1995


இதழ்:


ஆதவன் தீட்சண்யா "புலம்பெயர் இலக்கியம் - விவாதத்திற்கான புள்ளிகள்" - கீற்று மின்னிதழ் - 20.02.2010


இணையதளம்:


https://publications.iom.int/system/files/pdf/iml_34_glossary.pdf


********* ********* ********** ********* ********* ********** ********** **********